நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை–5.

ந.க..எண். 22660/2018/டிபி–4. தேதி:– 25.09.2018.

## சுற்றிக்கை

பொருள் கட்டிட அனுமதி – Online முறையினை நடைமுறைப்படுத்தும் கூர்ந்தாய்வு கட்டணம் வசூலித்தல் – ஆவணங்கள் பெறுதல் – கட்டணங்க செலுத்துதலுக்கான வசதிகள் – ஏற்படுத்துதல்– குறித்தான வழிமுறைகள் – பின்பற்றுவது – தொடர்பாக.

பார்வை: 1. மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்புறம் கடிதம் 14.011/4/2017– அம்ருத் IIA நாள். 14.09.2018.

2. அரசுக் கடிதம் எண். 56189/MA /2017–3 நாள். 18.09.2018.

*********

மத்திய அரசின் கொள்கை முடிவுகளின்படி கட்டிட அனுமதி வழங்கும் முறையினை எளிமைப்படுத்தவும், கட்டிட விண்ணப்ப பரிசீலனைக்கான கால அளவினை குறைக்கவும், பொதுமக்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும், கட்டணங்களையும் தாங்கள் இருக்குமிடத்தி லிருந்து இணையவழி வாயிலாக செலுத்திடவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான Software உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதன் தொடர்ச்சியாக, கீழ்க்காணும் வழிமுறைகளை கடைபிடிக்க தெரிவிக்கப்படுகிறது.

1. கூர்ந்தாய்வுக் கட்டணம் ஒவ்வொரு நகராட்சிக்கும், மாநகராட்சிக்கும் மாறுபட்டு உள்ளதால், அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான கட்டணவிகிதமாக ரூ. 500/– (ஐநூறு மட்டும்) கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் சமயத்தில் இணையவழி வாயிலாக செலுத்தும் வகையில் கணினி உதவி திட்ட அமைப்பாளர் வாயிலாக மாறுதல்கள் செய்யப்படவேண்டும்.

2. தகவல் மையத்தில் அனைத்து விண்ணப்பங்களும் பெறுவதால் முழுமையாக விண்ணப்பம் செய்யாமல் நகரமைப்பு ஆய்வாளர்கள் மனுதாரர்களிடம் ஆவணங்களை பெற்று, கணினியில் உள்ளீடு செய்யும் நிலை உள்ளதாக தெரியவந்துள்ளது. இவ்வாறு செய்வதால், பொதுமக்களுக்கு சிரமங்கள் ஏற்படுவதுடன் Online Concept ன் அடிப்படை கொள்கைக்கு முரணாக உள்ளது. எனவே, அனைத்து விண்ணப்பங்களையும் சம்பந்தப்பட்ட மனுதாரர்களே நேரடியாக அல்லது நகராட்சியால் அங்கீகாரம் செய்யப்பட்ட பட வரைவாளர்கள் வாயிலாகவோ Online ல் விண்ணப்பம் செய்திட ஊக்குவிக்கும் வகையில் நகரமைப்பு அலுவலர் மற்றும் கணினி திட்ட அமைப்பாளர்கள் வாயிலாக அனைத்து அங்கீகாரம் பெற்ற வரைபட வரைவாளர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் CFC ல் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தலை தவிர்க்க வேண்டும்.

3. கட்டணம் செலுத்திட மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு குறுந்தகவல் / email சென்றடைந்து 15 தினங்களில் கட்டணம் செலுத்த தவறினால், கோப்பு முடிக்கப்படும் வகையில் UTIS மென்பொருளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த

நடைமுறை 15.10.18–ல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதால், இதனை அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் LBS வாயிலாகவும் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் சமயத்திலும், கட்டணம் செலுத்த கேட்பு அனுப்பும் சமயத்திலும் மனுதாரருக்கும் தெரிவிக்க கோரப்படுகிறது. மேலும், அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரப்படுத்தவும் தெரிவிக்கப்படுகிறது.

4. ஆதார் எண்ணுடன் கூடிய அத்தாட்சி கடவுக்சீட்டு, (Aadhar Authentication Digital Signature / இ–முத்திரைலிருந்து நகரமைப்பு அலுவலர் / நகரமைப்பு ஆய்வாளர்கள் பெயரில் வாங்கிடவும், அதனை செயல்படுத்தவும் அறிவுறுத்தப்படுகிறது.

5. கட்டணங்களை இணையவழி வாயிலாக மனுதாரர்கள் செலுத்தவும், கட்டண விகிதங்களை தானாகவே கணக்கீடு செய்யும்வகையில் மென்பொருளில் கட்டண விகிதங்களை இணைக்க தேவையான வசதிகளை ஏற்படுத்திட கணினி உதவி திட்ட அமைப்பாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

6. இனிவரும் காலங்களில் கட்டிட அனுமதி உத்தரவு மற்றும் வரைபடங்களில் உத்தரவு வழங்கும் அலுவலரின் Digital Signature உடன் கூடிய உத்தரவு Online வாயிலாக மட்டுமே வழங்க வேண்டும்.

குறிப்பு:– அனைத்து நகராட்சி ஆணையர் / நகரமைப்பு அலுவலர்களுக்கும் ஆதார் அத்தாட்சியுடன் கூடிய Digital Signature “Cdac” ல் வாங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஒம்/–கோ.பிரகாஷ்
நகராட்சி நிர்வாக ஆணையர்

பெறுநர்:–
ஆணையாளர்.
அனைத்து மாநகராட்சி / நகராட்சி/
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/9/18
கண்காணிப்பாளர்
25/9/18